2018 மே 29]

என்று இருந்த நிலக்கரி கையிருப்பு இப்போது 5 நாட்களாக உயர்ந்திருக்கிறது. எதிர்காலத்தில் எவ்வளவு நிலக்கரி தேவையோ, அவற்றைக் கையிருப்பில் வைக்கின்ற அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கிறது.

முற்பகல் 10-45

நிலக்கரி கையிருப்பு குறைவாக இருக்கிறது; அதனால் மின்சார வெட்டு வந்துவிடுமோ என்ற பயம் இல்லாத அளவிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் எங்களுக்கெல்லாம் ஆணையிட்டு, எந்த அளவுக்கு நிலக்கரி கையிருப்பு இருக்கிறது என்பதையெல்லாம் அடிக்கடி ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். ஆக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல நாம் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. இப்பொழுது கோடைக்காலம் முடிந்து, கிட்டத்தட்ட காற்றாலைகள் மின் உற்பத்தியைத் துவங்க இருக்கின்ற காரணத்தினால், வருகின்ற நிலக்கரியை இரண்டொரு அனல் மின் நிலையங்களில் அப்படியே கையிருப்பில் வைத்துக்கொள்வதற்கான ஒரு திட்டத்தை வைத்திருக்கிறோம். ஆக, எதிர்காலத்தில் அனல் மின் நிலையங்களின் முழு கொள்ளளவை எட்டுகின்ற அளவுக்குத் தேவையான நிலக்கரி கையிருப்பில் இருக்கும். மத்திய அரசும் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் கூடுதலாக தமிழகத்திற்குத் தேவையான நிலக்கரியைக் கொடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

72—

பேரூராட்சியாகத் தரம் உயர்த்துதல்

***10403—திரு. ஆர். முருகையா பாண்டியன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி, அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம், சிவந்திபுரம் ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2018 மே 29

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெய்வமாக இருக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி, அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம், சிவந்திபுரம் ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். முருகையா பாண்டியன் அவர்கள்.*

திரு. ஆர். முருகையா பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திட்டங்களைச் சிறப்போடு செயல்படுத்தி வருகிற நம்முடைய இரட்டையர்கள் மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடியார் அவர்களுக்கும், அண்ணன் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பி.எஸ். அவர்களுக்கும் எனது வணக்கத்தினை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சியின் பெயர்தான் சிவந்திபுரம் ஊராட்சி. ஆனால், 9 கிராமங்களைக் கொண்ட இந்த ஊராட்சியின் ஜனத்தொகை கிட்டத்தட்ட 27 ஆயிரம்; 11 ஆயிரம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். வேடநத்தம்பட்டி, புலவன்பட்டி, அம்பலவாணபுரம், சிவந்திபுரம், காமராஜ் நகர், வராகபுரம், ஆறுமுகபட்டி, உத்திரமுத்தன்பட்டி, அரசம்பட்டி போன்ற கிராமங்களைக் கொண்டதுதான் இந்த சிவந்திபுரம் பஞ்சாயத்து. அதன் வருட வருமானம் 40 இலட்சம் ரூபாய், அங்கு 26 பணியாளர்கள் பணிபுரிகிறார்கள். ஆரம்ப துணை சுகாதார நிலையம் இருக்கிறது. ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி, சிறப்பான மார்க்கெட், வணிக வளாகக் கட்டடங்கள், அரசு அலுவலகங்கள் என சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற ஓர் ஊராட்சி. ஆனால், அந்த ஊராட்சியைப் பேரூராட்சியாக மாற்ற வேண்டுமென்று அங்குள்ள மக்கள் வெகுகாலமாக கோரிக்கை வைத்து வருகிறார்கள். எனவே, நிருவாக வசதியைக் கருதி, அதைப் பேரூராட்சியாக தரம்

2018 மே 29]

உயர்த்தித் தர மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 3 (பி)-ல் ஓர் ஊராட்சியின் வருமானம், விவசாயம் சாராத தொழில்களின் வேலைவாய்ப்பு சதவிகிதம், பொருளாதார முக்கியத்துவம் மற்றும் 30 ஆயிரத்திற்கும் குறையாத மக்கள்தொகை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்தலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசாணை எண் 131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16-3-2007-ல் ஊராட்சியைப் பேரூராட்சியாக, தரம் உயர்த்துவது குறித்து விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அந்த வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட வேண்டும். அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி, அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம், சிவந்திபுரம் ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது என்பது சட்டத்திற்குட்பட்டு வரக்கூடிய சூழ்நிலை இல்லையென்பதால்தான் அந்தப் பதிலை தெரிவித்தேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். முருகையா பாண்டியன் அவர்கள்.*

திரு. ஆர். முருகையா பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்பதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் நெல்லை மாவட்டத்தில் அது ஒரு பெரிய ஊராட்சி என்பதை மட்டும் கவனத்தில்கொண்டு, வருகின்ற காலத்தில் அதைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தொகுதிக்குட்பட்ட செங்கோட்டை நகராட்சி மிகவும் பழமைவாய்ந்த நகராட்சியாகும். அதனுடைய சுற்றளவும், மக்கள்தொகையும் மிகவும் குறைந்த அளவில் இருக்கின்றது. இதன் காரணமாக வருவாய் இல்லாமல், மத்திய அரசினுடைய திட்டங்களெல்லாம் திரும்பிச் செல்லக்கூடிய அளவுக்கு, TURIF-க்குச் செலுத்த வேண்டிய நிதியைக்கூட செலுத்த முடியாமலும், தண்ணீருக்குச் செலுத்த வேண்டிய வரியைக்கூட செலுத்த முடியாத அளவுக்கும், செங்கோட்டை நகராட்சி மிகவும் குறைந்த சுற்றளவில் இருக்கிறது. மக்கள்தொகையும் குறைந்த அளவில் இருக்கிறது. எனவே, அந்த நகராட்சியோடு, வல்லம் ஊராட்சி, பெரியபிள்ளைவலசை, பிரானூர் பார்டர், புதூர் பேரூராட்சிகளை இணைத்தால் வருவாயும் கூடும்; சுற்றளவும் கூடும். அரசினுடைய நலத் திட்டங்களையெல்லாம் அதிலே கொண்டுவர முடியும் என்ற கோரிக்கையை நான் ஏற்கெனவே வைத்து, அது சம்பந்தமாக அரசினுடைய 30-11-2017 ஆம் நாளிட்ட கடித எண் 21568 அனுப்பப்பட்டும், இதுவரை அதுசம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, இந்தச் சுற்றுப்புற ஊர்களையெல்லாம் செங்கோட்டை நகராட்சியோடு இணைத்து, அந்தப் பகுதி மக்களுடைய நன்மைக்கு உதவி செய்ய வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நகராட்சி அருகிலே இருக்கக்கூடிய உள்ளாட்சிப் பகுதிகளை இணைப்பது சம்பந்தமாகக் கூறினார். அதற்கு சம்பந்தப்பட்ட நகராட்சி மற்றும் ஊராட்சிகள் தீர்மானம் போட வேண்டும். அதுமட்டுமல்ல, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட

2018 மே 29]

தலைவர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள், பெயர் பெற்ற தன்னார்வத் தொண்டு அமைப்புகள், குடியிருப்போர் நலச் சங்கங்கள் ஆகியோர் முதல் கூட்டத்தை நடத்த வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் இரண்டாவது கூட்டத்தில், பெறப்பட்ட கருத்துருக்களை பரிசீலனை செய்ய வேண்டும். தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளின் கருத்துகள் தனித் தனியாகக் கேட்கப்படும். மேலும், அரசியல் கட்சிகள் மற்றும் கோரிக்கைகள் அளித்துள்ளவர்களின் கருத்துகளும் கேட்கப்படும். மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழுவிடம் தெரிவிக்கப்படும் கருத்துகளின் அடிப்படையில், பரிந்துரைகளின்மீது கருத்துருக்கள் தயாரிக்கப்பட்டு, நகராட்சி நிருவாக இயக்குநருக்கு அனுப்ப வேண்டும். தேவைப்பட்டால் இயக்குநர் 3-வது கூட்டத்தையும் நடத்தலாம். இப்படியெல்லாம் வருகின்றபட்சத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, சட்டத்திற்குட்பட்டு, விதிமுறைகளுக்குட்பட்டு இருந்தால் மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

73—

கலைக் கல்லூரி

***5635—திரு. விருகை V.N. ரவி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருகம்பாக்கம் தொகுதியில் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சென்னை மாவட்டம், விருகம்பாக்கம் தொகுதியில் கலைக் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.